அருள் தரும் இமயம்



thirukkalyanamatha.com

# திருக்கல்யாணத்தாய்



# வானுலக அரசியே வாழ்க!

மலர் : 3 இதழ் : 11 நவம்பர்–2012
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 ! 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு பபியான் ஜோசப்

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. லீமா ரோஸ்
திருத்தொண்டர்.பபிஸ்டன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
பங்குத் தந்தை
திருக்கல்யாண மாதா ஆலயம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 : 261230

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| அறிவோம் அன்னையை | 6 |
| அற்புதங்கள்... சாட்சிகள் | 11 |
| நிறைவான மனம் | 19 |
| புனிதை செசீலியம்மாள் | 21 |
| ஆத்துமாக்கள் தினம் | 24 |
| அன்னையின் அணிகலன்கள் | 27 |
| கிறிஸ்து அரசர் | 30 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 32 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத் தாய் இதழை ஒவ்வொரு மாதமும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்குவதில் பேருவகை கொள்கிறேன். அன்பு பிள்ளைகளே இம்மாத இதழ், சகல புனிதர்களின் சிறப்பிதழாக வெளிவருகிறது. இறைவனால் அழைக்கப்பெற்று தூய வாழ்வு வாழ்ந்து மனுக்குல மீட்புக்காக தம்மையே அர்ப்பணித்த புனிதர்களை நன்றியோடு நினைவுகூர்வது நமது கடமையாகும். அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் வாழ்ந்து இறையருளைப் பெறுவோமாக. அதுபோல கடந்த காலத்தில் நம்மிடையே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த சகல ஆன்மாக்களையும் அன்போடு நினைவு கூர்ந்து அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுதல் செய்வோம்.

நமது முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளை குழந்தைகள் தினமாக கொண்டாடும் நாம் அவரைப் போலவே சிறுபிள்ளைகளை அன்பு செய்வோம். அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் நாம் வாழ்ந்து காட்டுவோம். இந்த ஆண்டு விசுவாசப் பிரகடன ஆண்டாக நமக்கு திருச்சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது அன்னை மரியைப் போல நாமும் விசுவாசத்தில் உறுதியாய் இருந்து இவ்வுலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழுவோம். திருக்கல்யாணமாதா அன்னையின் அருள் பெற்று குடும்ப வாழ்விலும், தொழில் முயற்சிகளிலும், கல்வி முன்னேற்றத்திலும் வெற்றி வாகை சூடிடுவோம். அன்னையின் புகழை அனைவருக்கும் பரப்புவோம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## திருச்சபையில் ஒற்றுமை அவசியம்

"பழமை விரும்பிகளுக்கும், முற்போக்கு வாதிகளுக்கும் இடையே வளர்ந்து வரும் கருத்து முரண்பாடு திருச்சபையின் ஒன்றிப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. மற்றும் இது திருச்சபையின் உறுப்பினர்கள் மத்தியில் கடும் பதற்றநிலைகளை உருவாக்கி வருகிறது" என்று வத்திக்கான் திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுப் பேராயத்தின் புதிய தலைவர் பேராயர் ஜெர்கார்டு லூட்விக் முல்லர் கூறியுள்ளார். 'திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுப் பேராயத்திற்கு எதிராக பல முற்சார்பு எண்ணங்கள் நிலவுகின்றன. ஆயினும் இவை உண்மை நிலையோடு மிகச் சிறிதளவே தொடர்புடையவை' என்றுரைத்த பேராயர், இப்பேராயத்தில் ஏற்கனவே ஐந்தாண்டுகள் உறுப்பினராக இருந்த அனுபவம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவும் என்று தான் நம்புவதாக தெரிவித்துள்ளார். வருகிற அக்டோபரில் உலக ஆயர் மாமன்றமும் விசுவாச ஆண்டும் தொடங்கவிருக்கின்றது. "திருச்சபையின் வாழ்வுக்குத் தொல்லை தரும் கூறுகளை அறிந்து அவை மேற்கொள்ளப்படவேண்டும்" என்று கூறிய பேராயர், திருச்சபைக்கும், தனிப்பட்ட நாடுகளுக்கும் இடையே புதிய மற்றும் அடிப்படையான ஒன்றிப்பு வளர்வதற்கு ஆவண செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

## புதிய ஆயர்களிடம் திருத்தந்தை நற்செய்தியின் துணிச்சலான அறிவிப்பாளராக இருங்கள்.

கடந்த ஆண்டில் புதிதாக நியமனம் பெற்று திருப்பீட ஆயர்கள் பேராயம் நடத்தும் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் புதிய ஆயர்களைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இருக்கின்ற மக்கள் கிறிஸ்துவோடு நல்லுறவு கொண்டு விசுவாசத்தில் மிகவும் உறுதியுடன் வாழ்வதற்கு ஆயர்கள் துணிச்சலோடு அம்மக்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டுமென்றும், விசுவாசத்தின் ஒன்றிப்பை முதலில் ஊக்குவித்துப் பாதுகாக்குமாறும், ஆயர்கள் விசுவாசத்தின் முதல் சாட்சிகளாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், நற்செய்தி அறிவிப்புப் பணியின் புதிய முறைகள் பற்றிய பணி சில வல்லுனர்களுக்கு மட்டும் உரித்தானது அல்ல. மாறாக திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் உரியது என்று கூறிய திருத்தந்தை, "இத்தகைய பணியில் ஆயர்கள் இறைவனின் முதல் ஊழியர்களாக இல்லாதவரை மக்களுக்கான சேவையில் அவர்கள் வெற்றியடைய முடியாது" எனவும் அவர் கூறினார்.

–நன்றி : **நம்வாழ்வு**

# மறை மாவட்ட செய்திகள்



- 1.10.2012 அன்று நற்செய்தி நடுவத்தில் வைத்து வேதியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.
- 6.10.2012 அன்று மாலை மேதகு ஆயர் அவர்கள் அடைக்கலாபுரம் புதிய ஆலயத்தை அர்ச்சித்து திருவிழா மாலை ஆராதனையை சிறப்பித்தார்கள்.
- 7.10.2012 அன்று காலை திரேஸ்புரம் பங்கில் திடப்படுத்துதல் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 8.10.2012 அன்று காலை மறைமாவட்ட கல்வி குழு கூட்டமும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழு செயலர் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 9.10.2012 அன்று காலை பத்து மணி முதல் மறைமாவட்ட குருக்கள் அனைவருக்கும் தூத்துக்குடியில் வைத்து அன்று மாலை நடந்த திருப்பலியில் மேதகு ஆயர் அவர்கள் நமது மறைமாவட்டத்தில் உள்ள விசுவாச ஆண்டின் தொடக்கத்தை அறிவித்தார்கள்.
- 18.10.2012 அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 13,14.10.2012 ஆகிய இரு நாட்களும் புதுக்கோட்டை பங்கு விசாரணை மேதகு ஆயர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.
- 19.10.2012 அன்று வள்ளியூர் சமூக சேவை சங்க நிர்வாகிகளை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.
- 20.10.2012 அன்று மாலை மறைமாவட்ட மறைபணிக்குழு நிர்வாகிகள் கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 27.10.2012 அன்று காலை முதல் மாலை வரை தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்து மறைமாவட்ட மறைபணிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 28.10.2012 அன்று காலை தூத்துக்குடி புனித யூதா ஆலயத்தில் வைத்து திடப்டுத்துதல் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- தூத்துக்குடி மறைமாவட்டத்தின் 110வது பங்காக செப்டம்பர் 16.09.2012 அன்று ஆனைகுளம், மேதகு ஆயர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இந்த புதிய பங்கு கிழவநேரி பங்கிலிருந்து பிரிக்கப்பட்டதாகும்.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

- 04.10.2012 அன்று தூத்துக்குடி மாவட்ட வெள்ளிவிழா கொண்டாட்டங்கள் நமது பஞ்சாயத்து அளவில் நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்து தலைவர் திரு. ஜார்ஜ் அவர்கள் தலைமை தாங்க விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது.

- 06.10.2012 அன்று முதற்சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

- 07.10.2012 அன்று மாலை மூன்று மணிக்கு சாத்தான்குளம் மறைவட்ட அளவிலான அன்பியப் பொறுப்பாளர்களுக்கான சிறப்புக்கூட்டம் நமது ஊரில் வைத்து நடைபெற்றது. அதில் நமது பங்கின் சார்பாக திரு.அற்புதராஜ், திருமதி. ரெவினியூஸ் ராணி, திருமதி. ரெஜினாள் மேரி பங்கு பெற்றனர். அதனைத் தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு நமது ஊர் 12 அன்பியங்களின் பொறுப்பாளர்களுக்கும் (தலைவர், செயலர், பொருளாளர் ) மறைமாவட்ட அன்பியப் பொறுப்பாளர் தந்தை அவர்கள் தலைமையில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

- 14.10.2012 அன்று நமது பங்கில் ஞாயிறு திருப்பலியில் விசுவாச ஆண்டானது நமது பங்குத் தந்தை அவர்களால் சிறப்பாக தொடங்கிவைக்கப்பட்டது.

- சகல ஆத்துமாக்கள் திருவிழாவை முன்னிட்டு நமது ஊர் கல்லறைத் தோட்டமானது நமது ஊர் நற்கருணை வீரர்கள் சபையார்களால்சுத்தம் செய்யப்பட்டு அனைத்து கல்லறைகளுக்கும் வெள்ளை அடிக்கப்பட்டது.

- அன்றுமாலை மதுரையிலிருந்து வருகைபுரிந்திருந்த வின்சென்ட் தி பவுல் சபையினருக்காக நமது பங்குத் தந்தை தலைமையில் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

- 15.10.2012 அன்று கடந்த ஆண்டு நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் +2 படித்த அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் தமிழக அரசின் விலையில்லா மடிக் கணிணி வழங்கப்பட்டது. இந்த மடிக் கணிணிகளை சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கினார்கள்.

- 21.10.2012 அன்று நமது பங்கில் விசுவாசப் பரப்புதல் ஞாயிறு பங்குத் தந்தை தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- நமது பங்கைச் சார்ந்த திரு. அந்தோணிமுத்து – ஹெலன் ரோசரி இவர்களின் மகன் சகோ.ஜோசப் பாக்கியராஜன் அவர்கள் பீகார் மாநிலத்தில் பெட்டியா மறைமாவட்டத்தில் திருத்தொண்டராக 27ம் தேதி திருநிலைபடுத்தப்படுகிறார்.

**– பங்குத்தந்தை**




# நிர்வாகக்குழு கூட்டம்

07.10.2012 அன்று காலை 11.00 மணிக்கு பங்குத் தந்தை தலைமையில் பங்கு நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது.

அந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

1. முதல்சனி வழிபாடு மற்றும் பணிகளை இன்னும் சிறப்பாக செய்ய திட்டமிட்டு செயல்பட வேண்டும். சாப்பாடு கவுண்டரில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித் தனி கவுண்டர்கள் அமைத்து போர்டு வைக்கவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

2. கோவில் வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களை சந்தித்து அவர்களைப் பற்றிய முழுவிபரங்களையும் விசாரித்து திரு. சந்தனத் திரவியம் அவர்கள் பங்குத்தந்தையிடம் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

3. கோவிலில் கேமரா பொருத்துவது சம்பந்தமாக நாகர்கோவிலில் உள்ள ஒரு நிறுவனம் முழுவிபரம் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளது.

4. சமையல் பாத்திர வரவு-செலவை அடுத்தமாத திருக்கல்யாணத் தாய் மாத இதழில் வெளியிட திரு.சூசை செசன் ராஜ் அவர்கள் ஏற்பாடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

5. சப்பர ஜோடனை சம்பந்தமாக சப்பர மேஸ்திரியை சந்தித்து ஒரு வார காலத்திற்குள் பங்குத் தந்தையிடம் விபரம் தெரிவிக்க திரு. இருதய ராஜ் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

6. திருத்தலக் கடையில் வேலை செய்யும் பணியாளருக்கு மாதம் ரூ.500/- அதிகம் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

7. திருவிழாக் காலத்தில் 8,9,10 ஆகிய மூன்று திருவிழா நாட்களிலும் முழு நேரம் மின்சாரம் சப்ளை செய்ய மின்சார வாரியத்தை சந்தித்து ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டது.

8.வரும் 2013ம் ஆண்டு நமது அன்னையின் தேர்ப்பவனியானது 100வது ஆண்டு தேர்ப்பவனி ஆகும். அதை சிறப்பாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

9. புனித நீர், புனித எண்ணெய் கொடுப்பதற்கு கோவில் மைதானத்தின் வடக்குப் பகுதியில் புதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. இதற்கு பொறுப்பாளர்களாக திரு. ஜேம்ஸ், திரு. சூசை செசன்ராஜ், திரு. அருள்ராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்..

**- பங்குத்தந்தை**

## அறிவோம் அன்னையை!



- அன்னை மரியாளின் பெயர் விவிலியத்தில் 26 முறை வருகிறது.
- 7 முறை அன்னை மரியாள் நற்செய்தியில் பேசுகிறார்.
- அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்பதே நற்செய்தியில் மரியாள் பேசிய கடைசி வார்த்தை ஆகும்.
- வருடத்தில் 13 விழாக்கள் மரியாளின் திருவிழாக்களாக திருச்சபை கொண்டாடிவருகிறது.
- சைமன் ஸ்டாக் என்பவரிடம் முதன் முதலாக உத்திரியம் கொடுக்கப்பட்டது.
- மே31ம் தேதி மரியாள் எலிசபெத்தை சந்தித்த நினைவு நாளாக கொண்டாடுகிறோம்.
- இந்தியா, பிரான்ஸ், பாரகுவே, மால்ட்டா, தென்ஆப்ரிக்கா, தாய்லாந்து போன்ற நாடுகள் விண்ணக அரசியை பாதுகாவலியாக கொண்டு வழிபடும் நாடுகளாகும்.
- அன்னையை ரோமாபுரியில் பனிமலை மாதா என்றே அழைக்கிறார்கள்.
- மரியன்னையின் தேவாலயங்கள் அதிகமாக உள்ள நாடு இத்தாலி நாடாகும்.
- ரோம் நகரில் அமைந்துள்ள மேரி மேஜர் பேராலயமே இவ்வுலகில் மரியன்னையின் மிகப் பெரிய தேவாலயம் என பெயர் பெற்றுள்ளது.

– **ஜெ. ஜெனி,** பொற்பை

## எல்லோரும் நலம் வாழ...

- தாமரை மலரை நீரில் காய்ச்சி காலை மாலை சாப்பிட்டு வந்தால் மூளை பலமடையும்.
- கண் இமைகள் அடிக்கடி துடித்தால் உள்ளங்கையால் ஐந்து நிமிடம் கண்களை மூடிக் கொள்ளவும்.
- நாக்கில் புண் இருந்தால் கடுக்காய் தூளை வெண்ணெயில் குழப்பி தடவி வந்தால் சுகமடையும்.
- வேனல் கட்டிக்கு சுத்தமான தேன், சுண்ணாம்பு கலந்து தடவி வரவும்.
- குமட்டலுக்கு சிறிது கடுகை தண்ணீர் விட்டறைத்து அதை தண்ணீரில் கலந்து குடித்தால் குமட்டல் உடனே நீங்கும்.
- விக்கலுக்கு ஒரு சிறிய ஐஸ்கட்டியை வாயில் போட்டு அது கரையும் வரை மென்று வந்தால் விக்கல் உடனே போய்விடும்.

கவிஞர்.மதுரை **வி.ஜி.ஏ ஆல்பர்ட்**

# மரணத்தின் மறுவினாடி...

மரணம் உண்டென்று அறிந்தும்
ம(ற்)னம் போன வழியில் அலைகிறாயே,
மாசில்லாதவரை மறந்து.

நியாயத்தீர்ப்பை நன்கு தெரிந்தும்
நீதியற்ற செயல்கள் செய்கிறாயே
நித்திய தேவனை துறந்து.

அதைச் செய்வேன் இதைச் செய்வேன்
என மார் தட்டுகிறாயே மனிதா...
உன்னால் சொல்ல முடியுமா...?
மரணத்தின் மறுவினாடி
என்ன செய்வாய் என்று..!

**-K.அலெக்ஸியா கண்ணன்,**
கொச்சின்.

# மகிமை நிறை அன்னையே...

மகிமை நிறை அன்னையே
மங்காத பேரொளியே
மன்றாட்டு கேட்டிடும் – உம்
மக்களின் எதிரொலியே
மாசில்லா கன்னிகையே
மாந்தரின் குலவிளக்கே
மாபரனை எமக்கு ஈந்த
மாபெரும் விண்ணரசி
மாணவர் நல் மதிப்பெண் பெற
மாந்தரின் குறை தீர்க்க
மழலை வரம் ஈந்து
மகிழ்விக்கும் இராக்கினியே
நீர் வாழ்க...

**-தே. சுகிர்தமணி அன்பரசன்,**
கவரப்பேட்டை




# பாதம் சரணடைவோம்...

பொற்பை நகர் அன்னையே
பொங்கும் வனப்புடனே
பக்தர்கள் எம்மைக் காத்து
பரவசமடைபவளே
அன்பிலே அழகான புன்னகையை
ஆர்ப்பரிக்கும் எங்களின் மத்தியிலே
ஊர் புகழும் உயர்ந்த தேரினிலே
உலகை ஆளும் வேந்தனின் கன்னித்தாயே
உம் பாதம் பணிகின்றோம்
நாடிவரும் எம்குரல் கேட்பாயே
தேடிவரும் மாந்தர்க்குஅருள்வாயே
பொற்பை நகர் அமர்ந்த தாய்மரியே
பொறுப்புடனே உம்மக்களை காப்பாயே
உம் பாதம் சரணடைவோம்.

**-D. ஜோஸ் பின்மேரி தாசன்**
கவரப்பேட்டை






# நன்றிகள் பலகோடிகள்
# 06.10.2012 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| முருகேசன், நடேசன்குடியிருப்பு | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 501.00 |
| ஆஷா ஷைனி, தென்திருப்பேரை | 500.00 |
| சிலுவை அந்தோணி கனி, பொற்பை | 501.00 |
| நெல்சன் தாமஸ், பொற்பை | 500.00 |
| அமல்ராஜ், பொற்பை | 1001.00 |
| எட்வர்ட் லாரன்ஸ், ஜாண்மேரி, பொற்பை | 300.00 |
| பெயர்சொல்ல விரும்பாத பொற்பை நபர் | 300.00 |
| பெயர் சொல்ல விரும்பாத பொற்பை நபர் | 300.00 |
| அமிர்தராஜ், சென்னை -2 | 1,00,000.00 |
| போஸ்டன் ரஜுலா, தூத்துக்குடி | 1000.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| கிருஷ்ணமூர்த்தி, சென்னை | 1111.00 |
| அந்தோணிராஜ், பொற்பை | 500.00 |
| மிக்கேல் அந்தோணி, சென்னை | 500.00 |
| ஜெபாஸ்டின் ரெனிஷா | 501.00 |
| ஜெலஸ்டின் மெஜி, குரும்பனை | 500.00 |
| கிளைமண்ட்ஸ், பிள்ளைதோப்பு | 1000.00 |
| கெவின்ராஜ் சகாய டால்பி, இணையம் | 500.00 |
| அந்தோனி ஜவஹர், பிரிட்டோ | 1001.00 |
| அந்தோனி செல்வன், சாத்தான்குளம் | 1000.00 |
| சேசையா பழனியம்மாள், மணிமுத்தாறு | 1000.00 |
| அண்டோ டியோனா, தூத்துக்குடி | 500.00 |
| வினோ சுபி, வாணியக்குடி | 750.00 |
| பெயர் சொல்லவிரும்பாத இராமன்துறை நபர் | 500.00 |
| சுரேஷ், பொற்பை | 300.00 |
| திருக்குடும்ப போட், கோடிமுனை | 1000.00 |
| சேவியர் தேன்மலர் | 500.00 |
| ஆஷா, தென்திருப்பேரை | 500.00 |
| ஜாண், பொற்பை | 500.00 |
| ஜோசப் செல்வராஜ், பொற்பை | 3200.00 |
| கெவின் மல்லிகா, குளச்சல் | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 2000.00 |
| ஆஞ்சலின் மேரி, குளச்சல் | 430.00 |
| ஜெயா பாக்கியராஜ், நாகர்கோவில் | 300.00 |
| சுதா மைக்கேல் ராஜ், நாகர்கோவில் | 1000.00 |

| | |
|---|---|
| அனீஸ் மெஸ், பொள்ளாச்சி | 100.00 |
| ரூபன், பொள்ளாச்சி | 100.00 |
| நியூஸ்டன் ரோஸி, மணப்பாடு | 500.00 |
| ஜெமிலா சகாய ராஜ், மாடத்தட்டிவிளை | 100.00 |
| பதுவா டிராவல்ஸ், மணப்பாடு | 700.00 |
| ஆன்றனி ஜோஸ், கொல்லம் | 500.00 |
| ஜெனரிஷ் ஜெயந்தி, கொல்லம் | 200.00 |
| சுரேஷ் பாண்டியன், பொற்பை | 100.00 |
| குணமேரி, டக்கர்புரம் | 500.00 |
| முருகேசன், வ.நரையன்குடியிருப்பு | 1000.00 |
| பெயர்சொல்ல விரும்பாத சொ.குடியிருப்பு நபர் | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத பொற்பை நபர் | 10000.00 |
| ரோசரி, வடக்கன்குளம் | 100.00 |
| ஜேசுதாசன், பூச்சிக்காடு | 500.00 |
| வில்சன் ஜெபமணி, பாளை | 1000.00 |
| ப்ரெளன் லதா, ராஜாக்கமங்கலதுறை | 5000.00 |
| சோபி ஜார்ஜ், பூந்துறை | 1000.00 |
| ரதீஷ், இடிந்தகரை | 500.00 |
| ஆக்னஸ் பிரிட்டோ. ராஜாக்கமங்கலதுறை | 500.00 |
| டொமினிக் பிரபாகர், பொற்பை | 3000.00 |
| கென்னடி, தூத்துக்குடி | 100.00 |
| ராணி பிரான்ஸிஸ், தூத்துக்குடி | 100.00 |
| மொத்தம் | 1,53,596.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| எட்வின் காமராஜ் டெய்சி குடும்பத்தினர் | 5000 சாப்பாடு பிளேட், பூக்கள் |
| அன்னையின் அடிமை | பூக்கள் |
| பரணி, சென்னை | சி.வெங்காயம் 25 கி. |
| ஜெயச்சந்திரன், சென்னை | சேனை 40 கி, ம.பூசனி40 கி<br>கத்தரிக்காய் 1 மூடை |
| சுரேஷ், கோயம்பேடு | பீன்ஸ் 25 கி |
| ஈஸ்வரன், சென்னை | தக்காளி 8 பெட்டி |
| எஸ்.ஆர்.டி., சென்னை | உருளை 2 மூடை |
| நீலகிரி புரோட்டாஸ், சென்னை | வெங்காயம் 2 மூடை |
| பழனி அன் கோ சென்னை | வாழைக்காய் 350 எண்ணம் |
| ரவிஸ்டர், பொற்பை | கேரட் 46கி ப.மிளகாய் 64 கி |
| துரை, சென்னை | மாங்காய் 10 கி |
| ராயப்பன் பழனியம்மாள், முட்டம் | தேங்காய் 10 கி |
| லீமா ஞானம், மலேசியா | அரிசி 50 கி |
| சைமன் ஜெகதீஷ், மூகாம்பிகை | அரிசி 50 கி |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 300 கி |
| ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கி |
| கிறிஸ்து தாசன் அமலி, ஹெலன் நகர் | அரிசி 50 கி. தேங்காய் 50 |
| கிளிட்டஸ் ஆஸ்டின், கீழ மணக்குடி | அரிசி 50 கி |
| அருள் சேகர், பொற்பை | தேங்காய் 21 |

| | |
|---|---|
| சேசுராஜ், கன்னியாகுமரி | அரிசி 25 கி |
| சகாய பெனிட்டஸ், கன்னியாகுமரி | தண்ணீர் மூடை 3 |
| பிச்சையா, மணப்பாடு | தண்ணீர் மூடை 9 |
| ரமேஷ், மணப்பாடு | அரிசி 25கி தண்ணீர் மூடை 1 |
| பெயர் சொல்லவிரும்பாத பொற்பை நபர் | தேங்காய் 62 |

**முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (06.10.2012)**

| | |
|---|---|
| சமையல் யோவான் | 11000.00 |
| சுப்பையா தூய்மை பணி | 1000.00 |
| ரூபி ஸ்டோர் இருதயராஜ், ஏழரை மூடை அரிசி | 24000.00 |
| அலெக்ஸ் விறகு 40 எடை | 6050.00 |
| ஹென்றி மளிகை | 52623.00 |
| இம்மானுவேல் வண்டி வாடகை 12 நடை | 1900.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | 700.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 930.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 101 | 5050.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை 3நடை | 600.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| மொத்தம் | 104453.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 95104.00 |
| நன்கொடை மூலம் வரவு | 153596.00 |
| முதற்சனி மீத பொருட்கள் ஏல வரவு | 4100.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 1500.00 |
| மொத்தம் | 254300.00 |
| செலவுகள் | 104453.00 |
| இறுதி இருப்பு (வங்கியில்) | 149847.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.08.12 அன்று இருப்பு | 61014.00 |
| 01.09.12 முதல் 31.09.12 வரை விற்பனை | 121933.00 |
| மொத்தம் | 182947.00 |
| 01.09.12 முதல் 30.09.12 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 100597.00 |
| 30.09.12 அன்று இருப்பு | 82350.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. என் அக்காவிற்கு திருமணம் நடந்தமைக்காக நன்றி.
   – **ரஷ்மா,** உவரி
2. திருமண வரம் கிடைத்தமைக்கும் நல்ல வேலை கிடைத்தமைக்கும் அன்னைக்கு நன்றி! – **சகாயராணி,** புதூர்
3. 10ம் வகுப்புத் தேர்வில் 450மதிப்பெண்ணுக்கு மேல் எடுத்தமைக்காக நன்றி – **ரணா,** பொற்பை
4. பிள்ளைகளுக்கு திருமணம் கூடிவந்ததற்காக அன்னைக்கு நன்றி – **அனுபா மெர்லின் ஜோஸிதா,** நாகர்கோவில்.
5. பிரஷர் நோயிலிருந்து விடுவித்து உயிர்பிச்சை கொடுத்தமைக்காக அன்னைக்கு நன்றி. – **கீதா,** ராமன்துறை
6. பொறியியற் படிப்பில் வெற்றி பெற்றமைக்கு நன்றி.
   – **சீலிராஜ்,** நாகர்கோவில்
7. திருமணம் மற்றும் குழந்தைபாக்கியம் கிடைத்ததற்கு நன்றி
   – **மகேந்திரன்,** விழுப்புரம்.
8. அரபு நாட்டில் வேலை கிடைத்தமைக்கு நன்றி
   – சைமன், நாசரேத்.
9. தேர்வில் வெற்றிபெற்றமைக்கும், நல்ல வீடு கிடைத்ததற்கும் நன்றி. –**எம். ஜெனோலின்,** முதலூர்
10. தங்கைக்கு கல்யாணவரம் கிடைத்தமைக்கு நன்றி
    – **செல்வன்,** ஆனைமலை.
11. நற்சுகம் பெற்றமைக்கும், குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கும், குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டமைக்கும் அன்னைக்கு நன்றி.
    – **சங்கீதா,** கச்சனாவிளை
12. திருமணவரம் மற்றும் குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி.
    – **மெல்பா ஜூடி,** மணப்பாடு.
13. உறவினர் நன்மைக்காக நன்றி. – **அன்புராஜ்,** தூத்துக்குடி
14. தேர்வில் வெற்றி பெற்றதற்கும் நல்ல வேலை கிடைத்ததற்கும் நன்றி, – **பென்ஜமின்,** மதுரை

**– பங்குத்தந்தை**

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் ! 04639!261230 , 261330**

**07!10!2012 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 1771பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 1079 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 1031 பேர் |
| நற்சுகம்பெற | ! | 1607 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 1130 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 1007 பேர் |
| வேலைகிடைக்க | ! | 1372 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 1555 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 1888 பேர் |
| குடும்பநலன் | ! | 1922 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1463 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 1543 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1133 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 1244 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 1054 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1315 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 1206 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1274 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1438 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 1412 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 842 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## பங்கு மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

**வருகின்ற 18. 11.2012 ஞாயிறு அன்று காலை 10.00 மணிக்கு நமது அன்னையின் திருத்தல பெருவிழா சிறப்பு ஊர்ப்பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. மக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**- பங்குத்தந்தை**

# தொங்குவிளக்கு உணர்த்திய உண்மை...



விஞ்ஞான மேதை கலிலியோ பைசா நகரத்தில் இருந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த காலம். உள்ளூர் மாதா கோவிலில் ஆராதனைக்கு கலிலியோ சென்றிருந்தார். அப்போது ஏதோ யோசனையுடன் மாதா கோவிலின் கூரையை அண்ணாந்து பார்த்தார்.

தலைக்கு மேல் கூரையில் அழகான தொங்குவிளக்கு ஒன்று ஊசலாடிக்கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஊசலாட்டத்தை ஆராய்ச்சி நோக்கத்துடன் கலிலியோ கவனிக்கத் தொடங்கினார். ஊசலாடும் விளக்கு அசைந்த தூரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது. ஆனால் தொடக்கத்தில் அதுஒரு வினாடிக்கு எத்தனை முறை வலம் இடம் மாறிச் சென்றதோ அத்தனை நேரமே அசைவின் விசாலம் குறைந்து சென்றது. ஊசலாடிய விளக்கு சென்ற தூரம் குறைந்ததேயன்றி அசைவின் எண்ணிக்கை குறையவே இல்லை.

இதை கலிலியோ கவனித்தார். அந்தச் சமயத்தில் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்பதால் தனது நாடித்துடிப்பபைக் கொண்டு அசைந்து ஆடுகின்ற ஒரு பொருளின் சலனத்தின் விசாலம் மாறினாலும் கால அளவு மாறாதிருக்கும் என்ற உண்மையை அறிஞர்கள் முன்னிலையில் நிரூபித்துக் காண்பித்தார். பின்னாளில் உலகம் முழுவதும் வழக்கில் வந்த பெண்டுலம் கடிகாரங்கள், கலிலியோ கண்டறிந்த ஊசல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாயின. –நன்றி. **நம்வாழ்வு.**

# இஞ்சியின் மகிமை...



காய்கறிகளில் இஞ்சிக்கென்று தனி இடமுண்டு. இயற்கையிலே மருத்துவ குணங்கள் அடங்கிய இஞ்சி அசைவ உணவு தயாரிப்பில் முக்கிய இடத்தை வகிக்கிறது. உணவு ஜீரணத்திற்காகவும் நறுமணத்திற்காகவும் இஞ்சியை சேர்ப்பார்கள். நமது உடலில் வாய்வு, பித்தம் போன்ற உபாதைகளுக்கு இந்த இஞ்சியானது ஒரு கைகண்ட நிவாரணியாக செயல்படுகிறது. அதற்கும் ஒருபடி மேலாக இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமானாலோ, அதிக காலமாக சர்க்கரை வியாதியால் அவதிப்பட்டாலோ அன்றாட உணவில் இஞ்சி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. காரணம் நம் அனுதின உணவில் இதை சேர்த்துக்கொள்ளும்போது, இதன்பயனாய் நமது உடலில் இன்சுலின் சுரப்பிகளை அதிகமாக சுரக்கச் செய்கிறது. இதனால் சர்க்கரை நோயின் தீவிரம் வெகுவாக குறைகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. –நன்றி. **நம்வாழ்வு.**

# வாசகர் உள்ளம்...



* அறிவோம் அன்னையை பகுதியானது மாதம் தோறும் புதுப் புது செய்திகளைத் தாங்கி வருகிறது. பிற இதழ்களில் படித்திராத பல அரிய செய்திகளை வாரி வழங்குகிறது.

– **த. அன்டன்,** பூனா.

* கவிதைச் சோலையில் பூத்திருந்த ஒவவொரு கவிதை மலர்களும் சூப்பர். இளம் கிறிஸ்தவ கலைஞர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். – **சில்வெஸ்டர்,** வேம்பார்.

* திருக்கல்யாணத் தாய் தனது பக்தர்களுக்கு அளிக்கும் வரங்களுக்கு அற்புதங்கள் சாட்சிகள் என்ற பகுதியே சாட்சியாக விளங்குகிறது. வேதத்தில் சொன்னது போல் என்ன நடந்தாலும் நன்றி கூறுங்கள் என்பது போல பக்தர்களும் உடனுக்குடன் தாயின் வழியாக தாங்கள் பெற்ற வரங்களை இந்த அற்புதங்கள் சாட்சிகள் பக்கம் மூலமாக நன்றி செலுத்திவருகிறார்கள். நானும் கடந்த மாதங்களில் எனக்கு நேர்ந்த சில நல்ல காரியங்களை எழுதியிருந்தேன். ஆனால் என்னுடைய சாட்சிகள் இதுவரை வெளியானதில்லை. ஆண்டவருக்கே நன்றி, அன்னைக்கு வாழ்த்தும் வணக்கங்களும் உரித்தாகுக.

– **தெலஸ்போர்,** வடபழனி.

* அருட்தந்தை. சி. பீட்டர்பால் அவர்களின் ஜெபமாலை நம் அன்னை தந்த ஜெபமாலை என்ற கட்டுரையானதுஅருமையாக இருந்தது. ஜெபமாலையின் பயன்களையும், ஜெபமாலை சொல்வதால் நம் நமது அன்னையை எவ்வாறு மகிமைப்படுத்துகிறோம் என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருந்தார்கள். அருட்தந்தை அவர்களுக்கு வாழ்த்துக்கள். –**க. ஷைனிபா,** கோவை.

* இதய நோய் பற்றிய கட்டுரை வாசகர்களுக்கு ஒரு பயனுள்ள மருத்துவக்கட்டுரையாகும். – **வி. ஆலன்,** மதுரை.

* தூத்துக்குடி மாவட்டத்தைப் பற்றிய புள்ளி விபரங்கள் அசத்தல் படித்துக் கொண்டிருக்கும் எங்களைப் போன்ற மாணவர்களுக்கு தேர்வு சமயத்தில் உதவக்கூடிய அற்புத களஞ்சியமாகும்.

– **அமலா, அனிதா,** சென்னை.

* வேதமே வெளிச்சம் சிறுகதை குழந்தைகளுக்கு படித்துக்காட்ட வேண்டிய அற்புதமான சிறுகதை. இதுபோன்ற கதைகள் அதிகமாக வெளிவரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

– **ச. யாகப்பர்,** நாகர்கோவில்.

# முதல் சனி வழிபாடு (6.10.2012)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

அக்டோபர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 06.10.2012 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.அந்தோனி அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், மலையாள மொழியில் நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **ஜெகதீஷ்** அடிகளார், தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**அந்தோனி,** அருட்திரு.**பங்கிராஸ்,** அருட்திரு. **டொமினிக்**, அருட்திரு. **கிராசியஸ்**, திருத்தொண்டர் **பபிஸ்டன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு. **அந்தோணி** அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **150** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **15,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறை இரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **ஜெகதீஷ்** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு சிறப்பு நற்கருணை ஆசீர் நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# செப்டம்பர் 2012– வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| வங்கியில் ரூ. 273,621<br>கையில் ரூ. 5,497 | 279118.00 | |
| திருப்பலி வரவு 335X70 = 23450<br>பங்கு இல்லம் 81 X 70 = 5670 | 29120.00 | |
| ஞாயிறு காணிக்கை பங்கு +<br>கிளைப்பங்குகள் 9180+1560 | 10740.00 | |
| ஞானஸ்நானம் | 600.00 | |
| அடக்கம் | 125.00 | |
| சான்றிதழ்கள் | 20.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 259380.00 | |
| பழைய இரும்பு விற்றது | 1000.00 | |
| ஆலய வீடு முன்பணம் | 3000.00 | |
| ரூம் வாடகை | 500.00 | |
| முதல்சனி கடைகள் | 2515.00 | |
| பள்ளிகள் மூலம் வரவு | 5965.00 | |
| உபதேசியார் மூலம் ஏல வரவு | 7657.00 | |
| **மொத்தம்** | 599740.00 | |
| **செலவுகள்** | | |
| முதல்சனி அருட்தந்தையர்கள் படி | | 6400.00 |
| முதல்சனி பாத்ரூம் லைட்கட்டிய வகைக்கு | | 400.00 |
| ஜாண்சன் வண்டி வாடகை | | 500.00 |
| பழங்கள் (மாதம் முழுவதும்) | | 1950.00 |
| நோட்டீஸ் விநியோகம் செய்ய | | 500.00 |
| போர் போட லைட் கட்டிய வகைக்கு | | 200.00 |
| பதலி தந்தையர்கள் படி | | 1000.00 |
| உண்டியல் வெல்டிங் வைக்க | | 400.00 |
| நாற்காலிகள் வாடகை | | 350.00 |
| லாக்கர் வாங்கியது | | 70000.00 |
| வயர்மேன், போர்வெல் பள்ளி வளாகம் | | 1550.00 |
| ஜெனரேட்டர் சர்வீஸ் செய்ய | | 3800.00 |
| பைக் இன்சூரன்ஸ் | | 1000.00 |
| நியான் லைட் சரிசெய்ய ஆலயம் | | 1050.00 |
| கொத்தனார், கையாள் கூலி | | 5875.00 |
| சிமிண்ட் 10.5 மூடை | | 3575.00 |
| கார் ரிப்பேர் வகைக்கு | | 850.00 |
| ஜாண் வண்டி வாடகை | | 1200.00 |
| அருட்சகோதரி (விவிலிய விழா) | | 500.00 |
| விவிலிய ஞாயிறு பரிசுகள் | | 10680.00 |

| | |
|---|---|
| காலண்டர் முன்பணம் | 30000.00 |
| திருக்கல்யாணத்தாய் அக்டோபர் இதழ் அச்சு கூலி | 3500.00 |
| திருக்கல்யாணத்தாய் அட்டைப்படம் அச்சடிக்க | 6500.00 |
| ஜேசுதாஸ் சேஞ்சர் + கூலி | 29288.00 |
| உதவித்தொகை | 1500.00 |
| டீசல் பெட்ரோல் ஜெனரேட்டர் வகைக்கு | 3395.00 |
| டோபி | 260.00 |
| செக்போஸ்ட் | 75.00 |
| ஸ்டேஷனரி | 696.00 |
| மருந்துகள் | 150.00 |
| தொலைபேசி கட்டணம் | 562.00 |
| தபால் கட்டணம் | 73.00 |
| பீடச் சிறுவர்கள் சிற்றுண்டி | 300.00 |
| எலக்ட்ரிக் சாமான்கள் – ஆலயம் | 1375.00 |
| உரம் – தோட்டம் | 105.00 |
| ஓஸ்தி | 1350.00 |
| மளிகை சாமான்கள் | 1652.00 |
| பால் மற்றும் தண்ணீர் | 1430.00 |
| எரிவாயு | 430.00 |
| செய்தித்தாள் | 113.00 |
| மீன், மட்டன், சிக்கன், காய்கறிகள் | 1945.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| துப்புறவு பணியாளர்கள் ஊதியம் | 6000.00 |
| இரவுப் பணியாளர் ஊதியம் | 2000.00 |
| தொடக்கப் பள்ளி ஆசிரியை ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி | 1500.00 |
| புனித வரி | 21421.00 |
| மொத்த செலவு | 243400.00 |

| | |
|---|---|
| நிரந்தர வைப்பு நிதியில் | ரூ 300000.00 |
| வங்கியில் | ரூ.55213.00 |
| கையில் | ரூ 1127.00 |
| மொத்தம் | ரூ 356340.00 |


| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ. 599740.00 |
| மொத்த செலவு | ரூ. 243400.00 |
| இறுதியிருப்பு | ரூ. 356340.00 |





# குட்டீஸ் கார்னர்

டியர் குட்டீஸ், கடந்த மாத புதிர் விளையாட்டுகள் பிடித்திருந்தது என்று நிறைய குட்டீஸ்களிடமிருந்து நன்றி மடல்கள் வந்திருந்தது. இந்த வாரமும் அதே போன்று இரண்டு புதிர் விளையாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... புதிரை விடுவியுங்கள்... பை தி வே உங்கள் படிப்பு நேரங்களில் கவனமாக படித்து அதிக மதிப்பெண்கள் பெற முயற்சி செய்யுங்கள். காலையிலும் இரவிலும் இயேசப்பாவிடமும், அன்னை மரியாளிடமும் ஜெபத்தின் வழியாக பேசுவதை விட்டு விடாதீர்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

கூட்டிலிருந்து தேனெடுக்க சென்ற இந்த குட்டித் தேனிக்கு வழி மறந்துவிட்டதாம். எங்கே... நீங்கள் தான் இந்த குட்டித் தேனீயை அதன் கூட்டில் சென்று சேர்த்து விடுங்களேன்..!







அருகில் இருக்கும் இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்தபட்சம்

**6**

வித்தியாசங்கள் உள்ளது.

**60** செகண்டுகளில் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...

விடைகள் : 23ம் பக்கம்

ஹெல்த் கார்னர்

மன உறவு.!



# நிறைவான மனம்

நிறைவான மகிழ்வான வாழ்வே எல்லா மனிதரின் ஏக்கமும், தேடலும். அந்த மகிழ்வுக்காகவே எல்லா போராட்டமும். ஆனாலும் அத்தனை உழைப்புக்கும் களைப்புக்கும் பிறகும், எல்லா மனிதரும் மகிழ்வை அடைகிறார்களா? இல்லையே.... காரணம் உள்ளே இருக்கும் நிறைவை வெளியே தேடிக் கொண்டிருப்பதால்தான்!

மகிழ்ச்சியும் மனநிறைவும் மனிதருக்கு வெளியே இல்லை மனிதருக்கு உள்ளே தான் இருக்கிறது. நமது மகிழ்ச்சி நமக்குள்ளேதான் இருக்கிறது என்கிறார், "Happiness is an inside job" என்னும் நூலை எழுதிய தந்தை ஜான்பவுல். சே.ச. எனவே நல்ல மனநிலைகள் மனமகிழ்வைத் தருகின்றன என உணர்ந்து மனநிலை மாற்றங்களை உருவாக்கினால் மன நிறைவு நம்மைத் தேடிவரும்.

“போதுமென்ற மனநிலை: ஆசை தான் எல்லாவற்றிற்கும் காரணம் எனவே ஆசைகளைத் துறந்து போதுமென்ற மனநிலை நமக்குவரவேண்டும். வயிறார உண்ணவோ, பட்டினிகிடக்கவோ, நிறைவோ குறைவோ, எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்.” பிலி.4:11-12. எனும் பவுலடியாரின் மனநிலை மனநிறைவிற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நன்றி மனநிலை :நம் வாழவில் காணும் நிறைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதும், நன்றி மனநிலையில் வாழ்வதும் மனநிறைவுக்கான இன்னொரு வழி.

எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் (எபே.5:20) என்பது இறைவாக்கு. எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். (1தெச.5:17) என்பதும் இறைவார்த்தையே. எனவே இன்பமோ, துன்பமோ, நன்மையோ, தீமையோ அனைத்திற்காகவும் இறைவனுக்கு நன்றி கூறப்பழகிவிட்டால், மனமகிழ்வு எப்போதும் நமக்குச் சொந்தமாகும்.

நேர்மறை ஒப்பீடு : பிறரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல நேரங்களில் பொறாமையும்,ஆற்றாமையும் தான் நமக்கு மிஞ்சும். ஆனால் ஒப்பீட்டிலும் கூட ஒரு நேர்மறைப் பார்வை இருக்கின்றது. நம்மைவிட வசதிகளும் வாய்ப்புகளும் அதிகம் கொண்டவர்களைப் பார்க்கும்போது, அவர்களின் வாழ்விலும் ஏற்படும் பிணிகள், அமைதியின்மை, பாதுகாப்பின்மை போன்றவற்றை எண்ணிப் பார்த்து நாம் ஆறுதல்பட்டுக்கொள்ளலாம்.

நம்மை விட வசதியும் வாய்ப்பும் குறைந்தவர்களிடமும் மனநிறைவும் மகிழ்ச்சியும் உள்ளன என்னும் உண்மை நம் கண்களைத் திறக்கவேண்டும். மிகுதியாகச் சேர்த்தவருக்கு எதுவும் மிஞ்சவில்லை என்ற வேதவாக்கின்படி எந்தச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சி நம் மனதில் தான் இருக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்; இடைவிடாது ஜெபியுங்கள், என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- அருட்தந்தை குமார் ராஜா.



# கிச்சன் கார்னர்

## உக்காரை

பள்ளியில் பயிலும் நம் குழந்தைகளுக்கு மாலைச் சிற்றுண்டியாக பல நேரங்களில் நாம் கடைகளிலிருந்தே வாங்கிக் கொடுக்கிறோம். இது ஒரு சுகாதாரக்குறைவான, சத்து இல்லாத, பழைய அல்லது கலப்பட எண்ணையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளையே அதாவது வடை, பஜ்ஜி, போண்டா போன்ற பல வகையான உணவுகள் ஹோட்டல்களில் கிடைக்கிறது. அதையெல்லாம் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, நம் குழந்தைகள் மாலையில் பள்ளியிலிருந்து களைப்புடன் வரும் போது அவர்களுக்கு சிற்றுண்டியாக செய்து வழங்க இந்த மாதம் சூப்பர் ரெசிபி தயார். அது தான் **உக்காரை.** இது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடக்கூடியது. நம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கும் உடனடியாக செய்து கொடுத்தும் அசத்தலாம் வாங்க...

**தேவையான பொருட்கள் :**

கடலைபருப்பு –100 கிராம், பாசிப்பருப்பு – 50 கிராம், அச்சு வெல்லம் – 4 , ஏலம் –5 முந்திரி பருப்பு, திராட்சை – தலா 10, உப்பு ஒரு சிட்டிகை, நெய் அல்லது டால்டா – 50 கிராம்

**செய்முறை :** கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு இரண்டையும் அரைமணி நேரம் ஊற வைத்து மிக்ஸியில் போட்டு , சிறிது உப்பையும் சேர்த்து விழுதாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். ஏலக்காயை வறுத்து தூளாக்கிக் கொள்ளவும். பின்பு முந்திரி, திராட்சையை சிறிதளவு நெய்யில் வறுத்துக்கொள்ளவும். எடுத்துக்கொண்ட நெய்யில் பாதி அளவு ஒரு கடாயில் ஊற்றி அதை அடுப்பில் வைத்து சூடாக்கவும். சூடானபின் அரைத்துவைத்த பருப்பு விழுதை அதனோடு சேர்த்து நன்கு கிளறவும். கலவையானது நன்றாக வெந்து உதிரியாக வரும் வரை கிளறிக்கொண்டிருக்கவும்.

வேறொரு பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு நன்றாக கொதிக்க வைக்கவும். வெல்லப் பாகு நுரைத்து வரும் போது அதை அப்படியே பருப்புக் கலவையில் கொட்டி கிளறவும். பின்பு பொடி செய்த ஏலக்காயை அதனுடன் சேர்க்கவும். நன்றாக கிளறியவுடன் வறுத்து வைத்திருந்து முந்திரி திராட்சையை எடுத்து கலவையோடு சேர்த்து கிளறவும். பத்து நிமிடம் கிளறிய பின் இறக்கிவைத்து சுடச் சுடப் பறிமாறவும்.

– **S.மேரி லீலா,** பொற்பை

### உங்கள் குழந்தைகள் உடல் நலத்திற்கு அன்றாட உணவில்...

- புரோட்டீன் அதிகமாக சேருங்கள் அவர்கள் உயர்ந்து வளர...
- கார்போஹைட்ரேட்டும் கொடுங்கள் சோர்ந்துபோகாமல் சக்தியோடு விளையாட...
- கொழுப்பை குறையுங்கள் அவர்கள் இருதயத்தை பாதுகாத்துக்கொள்ள...
- வைட்டமின்களை வழங்குங்கள் அழகும் ஆரோக்கியமும் பெற...
- அதிக தண்ணீர் கொடுங்கள், சிறுநீரக பாதுகாப்பிற்காக...

– **M.மாரியஎப்சி,** பொற்பை

புனிதர்களின் பாதையில்...

# புனித செசீலியா

ரோம் நகரில் பிறந்த இவர் இளம் வயதிலேயே தன் கன்னித்தன்மையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததால் மணவாழ்வு வாழ விருப்பமில்லாதிருந்த இவரை வலேரியன் என்ற வாலிபனை கட்டாயப்படுத்தி மணமுடித்து வைத்தார்கள். மணமுடித்த நாளன்று அவள் தன் கணவனை நோக்கி கடவுளின் தூதர் ஒருவர் என் கற்புக்கு காவலாய் இருக்கிறார். எனவே கடவுளது கோபத்தை உம்மீது வரச்செய்யும் எதையும் செய்ய நீர் முயற்சிக்கலாகாது என்றாள். வலேரியன் அவளைப் பார்த்து கடவுளின் அந்த தூதரை நான் பார்ப்பேனானால் இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பேன் என்றார். அப்பொழுது செசீலியா ஞானஸ்நானம் பெற்றால் ஒழிய அவரைப் பார்க்க முடியாது என்றாள். சுரங்கங்களில் வசித்த உர்பன் என்னும் பாப்பானவரிடம் வலேரியன் போய் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். வீட்டிற்குத் திரும்பியதும் தன் மனைவியின் அருகில் ஓர் அழகிய வானதூதர் நிற்பதைக் கண்டார். வலேரியனுடைய சகோதரர் திபூர்சியுஸையும் செசீலியா மனந்திருப்பினாள். அல்மாகுஸ் என்னும் உரோமை அதிகாரி இரு சகோதரர்களையும் பிடித்து வேதத்துக்காக அவர்களைக் கொன்றான். சில நாட்களுக்குப் பின் செசீலியம்மாளையும் வேதத்துக்காக கொன்றார்கள். இவர்கள் கொல்லப்பட்டது மாற்குஸ் அவுரேலியுஸ் என்பவனது ஆட்சியில் அல்லது கோமோதுஸ் என்பவனது ஆட்சியில்; 161-ம் ஆண்டுக்கும் 190-ம் ஆண்டுக்கும் மத்தியில் இது நடந்தது.

புனித செசீலியம்மாளின் பெயர் திருச்சபையில் எப்பொழுதும் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது. திருப்பலி செபங்களின் போது ஆதிகாலத்திலிருந்தே அவளது பெயரைக் காண்கிறோம். கோவில் பாடகரின் பாதுகாவலியாக இவள் வந்திக்கப்படுகிறாள்.

சிந்தனை : இவளது முயற்சியால் இருவர் மெய்யான கடவுளை அறிய வந்தனர். இதுவரை எனது முயற்சியால் யாராவது அவரை அறிய வந்திருக்கிறாரா? நல்ல நூல்களின் வழியாகவும் அவரை பிறர் அறியச் செய்யலாம்.

செபம் : ஆண்டவரே, உம் மக்கள் உம்மையறிந்து நேசிக்கும் வரம் தாரும்.

**- தூயவர்களின் வரலாறு**

## தெரியுமா உங்களுக்கு!

- ஒட்டகப்பால் கரந்ததுமே கெட்டியாகிவிடும்.
- வேகமாக பறக்கக்கூடிய பறவை ஸ்விப்ட்.
- கூடு இல்லாத பறவையினம் பெங்குயின்.
- பாம்புகளுக்கு கேட்கும் திறன் கிடையாது.
- சுண்டெலிக்கு வியர்ப்பது கிடையாது.
- பூனைக்கு இனிப்பு ருசி தெரியாது.
- எறும்பு தன் எடையைவிட 3 மடங்கை சுமக்கக்கூடியது.

**- ஸ்வீட்டன்,** திசையன்விளை

# ஜவஹர்லால் நேரு



ஜவஹர்லால் நேரு 1889ம் ஆண்டு நவம்பர் 14-ல் பிறந்தார். ஆரம்பப் படிப்பை வீட்டிலேயே பயின்று பின் இங்கிலாந்தில் உள்ள ஹாரோ கேம்பிரிட்ஜ் பள்ளிகளில் படித்து பின் சட்டம் படித்து திரும்பினார். 1919-ல் விடுதலைப் போரில் ஈடுபட்டவர், இறுதிவரை நாட்டுக்காகவே வாழ்ந்தார். ஒன்பது முறை சிறை சென்றார். இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நேருவின் வரலாறும் பின்னிப் பிணைந்ததாகும். எனக்குப்பின் என் லட்சியங்களை அவர் நிறைவேற்றுவார் என்று கூறி, நேருவே எனது வாரிசு என வெளிப்படையாக காந்திஜி கூறினார். இந்திய திருநாட்டின் பிரதமராக பொறுப்பேற்று நாட்டை சூழ்ந்திருந்த எண்ணற்ற பிரச்சனைகளைச் சமாளித்து முன்னேற்றுவதற்குத் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்தார். அணி சேரா நாடுகளின் இயக்கம் அவரது குறிப்பிட்ட சாதனைகளில் ஒன்றாகும். அற்புதமான பல நூல்களை எழுதியுள்ள இவர் உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை பல வழிகளிலும் உயர்த்தியவர். இவர் ஆசிய ஜோதி, மனிதருள் மாணிக்கம் என உலகத் தலைவர்களால் பாராட்டப்பட்டார். 1964ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதி அமரரானார். இவரது பிறந்த நாள், நமது நாட்டில் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**- டென்சன் ஜாக்குலின்,** வெள்ளக்கோயில்

## செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1 அஸ்பெனாசு 5 உருண்டு 9 தெய்வமகன் 13 அரசுரிமை 17 சமாதானம் 21 படை

**வலமிருந்து இடம் :** 2 பெல்தசாச்சர் 6 பொற்சிலை 10 கனிகள் 14 பெரிய ஆற்றின் 18 உண்மை 22 ஞானிகள்

**மேலிருந்து கீழ் :** 3 அரியோக்கு 7 மறுமொழி 11 பெல்சாட்சர் 15 மிக்கேல் 19 மகள் 23 நூலை 25 வாழ்வு

**கீழிலிருந்து மேல் :** 4 பசும்பொன் 8 சினத்தால் 12 தாரியு 16 வலிமை 20 வெற்றி 24 முடி.

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்று பாராட்டுப்பெறுபவர்கள்

1. **D.ஜோஸ்பின் மேரிதாசன்**
கவரப்பேட்டை
2. **டோம்னிக் பெனிட்டா**
கவரப்பேட்டை
3. **J.சேசுதுரை ஜென்ஸி**
கவரப்பேட்டை
4. **J. ஏசுவடியான் சுமதி**
கவரப்பேட்டை
5. **கபிரியேல் மேரி**
பொற்பை
6. **G. ரெஜினாள் மேரி**
பொற்பை
7. **குயின்ரோஸ் பாக்கியம்**
பொற்பை
8. **A.மரிய ஜோசப் செல்வராஜ்**
வெள்ளக்கோவில்
9. **A.அந்தோனி ஜெபசிங்**
வெள்ளக்கோவில்
10. **L.M.அருள் அனிதா,** பொற்பை
11. **S. மேரி லீலா,** பொற்பை
12. **S.லூர்து ரெக்ஸ்,** பொற்பை
13. **டேவிட் தேவராஜ்**
வெள்ளக்கோவில்

# அறிவியல் கண்காட்சி

பொத்தக்காலன்விளை புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் கடந்த அக்டோபர் மாதம் 12ம் தேதியன்று அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. அன்று மாலை 3 மணியளவில் பள்ளியின் தாளாளர் தந்தை அருட்திரு. பபியான் ஜோசப் அடிகளார் கண்காட்சியை திறந்துவைத்தார்கள். பள்ளியின் கலையரங்கத்தில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் மாணவ மாணவியர் தாயரித்து கொண்டுவந்திருந்த அறிவியல் கருவிகள் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.


பள்ளியின் அனைத்து மாணவ-மாணவியர் மற்றும் ஆசிரியர்கள், அலுவலகர்கள் அனைவரும் கண்காட்சியை கண்டு களித்தனர். மாலை 5.00 மணியளவில் அனைத்து அறிவியல் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி தலைமை ஆசிரியை திருமதி. மார்க்ரெட் அவர்கள் அறிவியல் கண்காட்சியை நிறைவு செய்தார்கள். **- ஜேம்ஸ் பூபால்ராயன்,** பொற்பை

# வாழ்வு தரும் கனிகள்


பழமொழிகள் எனப்படும் நீதிமொழிகள் புத்தகம்3:13-18ல் வாழ்வு தரும் கனிக்கு ஒன்பது பண்புகள் உண்டு என்று வாசிக்கிறோம். அவையாவன

1. வெள்ளியைவிட ஞானமிகு நலன் தருவது.
2. பொன்னைவிட ஞானத்தால் வரும் செல்வமே மேலானது.
3. ஞானம் பவளத்தைவிட விலை மதிப்புள்ளது.
4. அரும்பொருள் ஒன்றும் அதற்கு நிகராகாது.
5. அதன் வலக்கை நீடித்த ஆயுளைத் தருகிறது.
6. அதன் இடக்கை செல்வமும், மேன்மையும் தருகிறது.
7. அதன் வழிகள் யாவும் இன்பம் தரும் வழிகள்.
8. அதன் பாதைகள் யாவும் நலன் தருபவை.
9. அதனைப் பற்றிக் கொள்வோர் நற்பேறு பெற்றோர்.

-நன்றி : **நம்வாழ்வு**




**18ம் பக்க புதிர் விடைகள் :**



# ஆத்துமாக்கள் தினம்



நவம்பர் -2ம்தேதியன்று இறந்தவர்கள் அனைவரையும் இன்று நாம் நினைக்கின்றோம். நம் அன்னையாகிய திருச்சபை, மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின் வேதனைப்படும் தன் மக்களை நினைக்கிறது. அவர்களுக்காக பரிந்துபேசுகிறது. அவர்களுக்கு தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன் அவர்களை சீக்கிரம் ஒன்றிக்கும்படி மன்றாடுகிறது.

இன்று ஒவ்வொரு குருவும் மூன்று திருப்பலி செய்கிறார். இந்த சலுகை 10.8.1915லிருந்து அளிக்கப்பட்டிருக்கிறது. முதல் திருப்பலி உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் அனைவருக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இரண்டாவது திருப்பலியை பாப்பானவரது கருத்துக்களுக்காகவும், மூன்றாவது திருப்பலியை குரு தமக்குப் பிரியமான கருத்துக்களுக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

இயேசுவை நேசிக்கிறவன் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஏராளமாக உதவி செய்வான். ஏனெனில் அவர்கள் இயேசுவின் சகோதரர்கள். சிறையிலிருக்கும் சகோதரர்கள், மோட்ச மகிமை என்னும் ஆடையின்றித் தவிக்கும் சகோதரர்கள் அவர்களுக்கு உதவி செய்யும்போது நாம் இயேசுவுக்கு உதவி செய்கிறோம்.

பிறர் மீது கடுகளவு அன்பு உன்னிடம் இருக்குமானால் உத்தரிக்கும் ஆத்துமாக்களுக்கு நீ உதவி செய்வாய். நீ உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கும்போது பிறர் உனக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்புவாய். அப்படியானால் இப்பொழுது அவர்களுக்கு உதவி செய். எந்த அளவையால் நீ அளப்பாயோ அதே அளவையால் உனக்கு அளக்கப்படும்.

இந்த உலகில் ஒருவருக்கு உதவி செய்கிறோம். அவருக்கு நமது உதவி இன்னும் தேவைப்படுகிறது. அவர் நம்மிடம் இன்னும் உதவி கேட்டு வருகிறார். உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி செய்து அவர்களை மோட்சத்துக்கு அனுப்புகிறோம். இனி அவர்களுக்கு எவ்வித தேவையும் கிடையாது. அவர்கள் கடவுளை வாழ்த்துவார்கள். தம் உபகாரிகளுக்காக செபித்துக் கொண்டிருப்பார்கள். நன்றி மறப்பது மோட்சத்தில் கிடையாது.

-நன்றி : **தூயவர்களின் வரலாறு**

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து







## V.ஆரோன் ரெனிஷ்

பிறந்த நாள் : 18.11.2011

18.11.2012 அன்று தன்னுடைய முதலாவது பிறந்த நாளை கொண்டாடும் **ஆரோன்** திருக்கல்யாணத் தாயின் அரவணைப்பாலும், அருளாலும் எல்லா வளமும் பெற்று திருக்கல்யாணத் தாயின் அன்புப் பிள்ளையாக பல்லாண்டுகாலம் வாழ வேண்டும்.

## என்று வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்...

தந்தை :**J. வினோத் ஸ்டாலின்** தாய் :**V. விமலா**

தாத்தா : **P. சேசு துரை நாடார்**

பாட்டி : **J. கத்தரின் அம்மாள்**

தாத்தா : **T. ராஜகனி நாடார்**

பாட்டி : **R. லூர்து நேசம்**

ஞானத்தந்தை :**R. வின்சென்ட் சுரேஷ்**

மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள்...

**ஆரோன் வீடியோஸ் & போட்டோஸ்**
பொத்தக்காலன்விளை
செல் : 9442088337

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. **ஜோனா மெல்பா** | 02.09.12 | ஜோசப் சந்திரசேகர்<br>அந்தோனி ராஜமெட்டில்டா | பொற்பை |
| 2. **ஜெபர்சன் கவின்ராஜ்** | 30.09.12 | யோகராஜ் – ஆனந்தி | பொற்பை |
| 3. **அந்தோனி சிரோன் பாலன்** | 30.09.12 | சித்திரை சகாயராஜா<br>திருக்கல்யாணி | பொற்பை |
| 4. **பிரின்சிகா** | 30.09.12 | இருதயராஜ்<br>ஆரோக்கிய அமல ரோங்லின் | பொற்பை |
| 5. **அல்ஸ்டன் மரிய ரெனிஸ்** | 30.09.12 | சிலுவைதங்கராஜா<br>ஆரோக்கிய ஜெயந்தி | பொற்பை |
| 6. **சீயோன் ஜோஸ்வா** | 07.10.12 | வின்செண்ட் – லதா | பொற்பை |

## நவமுதலூர் உபகாரமாதா ஆலய திருவிழாவின்போது புதுநன்மை பெற்றவர்கள்


**1. செல்வ இன்பன் ராஜ்**
**2. ஜார்ஜ் ஜாண்சன் ராஜ்**
**3. ஹாரிஸ் ராஜா**
**4. அந்தோனி ஜெனிஸ் ராஜா**
**5.சேவியர் பிரைட்டன் குமார்**
**6. ஜெனிபர் பெர்லின்**
**7. ஜெய பெபின் மேரி**
**8. சார்மிளா மேரி**
**9. சுஜிப்பிரியா**
**10.கேத்ரின் ஷேரன்**

# வாழ்த்துகிறோம்

| எண் | மணநாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| **1** | **18.10.12** | **அம்புரோஸ் அசோக்குமார்**<br>**சகாய நிஷாந்தி** | **கொழுந்தட்டு** |
| **2.** | **25.10.12** | **சூசை அமல்ராஜ்**<br>**லென்சியா** | **பொற்பை** |

## இதய அஞ்சலி

**அந்தோனி ஜூலியன் நெல்சன்** பொற்பை **11.10.12**



# அன்னையின் அணிகலன்கள்

## புகழ் மாலையின் அமைப்பு

புகழ் மாலையின் தொடக்கமாக புனித மரியாளே, கடவுளின் ஆலயமே, புனித மரியாளே, பரலோகத்தின் இராக்கினியே.. என்று ஒவ்வொரு முறையும் பாடும்பொழுதும், மக்கள், எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று பதிலளிக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

ஆனால் 15-ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் புனித மரியாளே என்பதற்குப் பதிலாக புனித மாதாவே என்று புகழ்மாலையில் பயன்படுத்தப்பட்டது. புகழ்மாலையின் உள்ளடக்கம் அன்னை மரியாளின் புகழை எடுத்துரைக்கும் விதமாக அமைந்திருந்தது. இதை இயற்றியவர்கள் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதர்களின் மன்றாட்டு மாலையை மாதிரியாகக் கொண்டு இயற்றினார்கள்.

புகழ் மாலையின் அமைப்பில் முதன்மையான இடம் மரியாளின் தாய்மையைப் புகழும் விதத்தில் அமைந்துள்ளது. பின்னர் அன்னை மனிதர் மீது கொண்டுள்ள அன்பை எடுத்துக்கூறியும் அடுத்ததாக விசுவாசப் பிரமாணத்தில் அன்னைக்கு வழங்கப்பட்ட தலைப்பு பற்றியும் அதனைத் தொடர்ந்து இராக்கினி எனப்படுகிற புகழ்ச்சி வார்த்தைகளும் இடம் பெற்றன.

**1. மரியாளின் புனிதம் : மரியாளின் புனிதத்தை எடுத்துக்கூறும் புகழ்மாலைகள் இடம் பெறுகின்றன (புனித மாதாவே...)**

**2. மரியாள் – ஒரு தாய் : ஒருதாயின் பல முகங்களை விளக்கும் விதமாக புகழ்மாலையில் சில முத்துக்கள் அமைந்துள்ளன. (கிறிஸ்துவினுடைய மாதாவே, திருச்சபையின் மாதாவே...)**

**3. மரியாள் – ஒரு கன்னி : மரியாள் தனது கன்னிமையில் பேறுபெற்றவள் என்பதை எடுத்தியம்பும் வண்ணம் அமைந்துள்ளது. (தயையுள்ள கன்னிகையே.. மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே...)**

**4. மரியாளை வெளிப்படுத்துகிற அடையாளங்கள்: மரியாளின் பண்புகளை வெளிப்படுத்தும்விதமாக 13 அடையாளங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டுப் புகழ் மாலையின் முத்துக்களாகக் கோர்க்கப்பட்டுள்ளது. (தாவீதின் உப்பரிகையே, ஞானத்தின் இருப்பிடமே..)**

**5. மரியாள் – இரக்கத்தின் தாய் : அன்னையின் இரக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் சில முத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன**
(பாவிகளுக்கு அடைக்கலமே, வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே...)

### மரியாள் ஓர் இராக்கனி :

புகழ் மாலையின் இறுதி 13 முத்துக்கள், மரியாளை, புனிதர்களின் இராக்கினி என்றும் பரலோகத்தின் இராக்கினி என்றும் வெளிப்படுத்துகின்றன. (பிதாப் பிதாக்களின் இராக்கினி... அப்போஸ்தலர்களின் இராக்கினி...) மேலும் ஐந்து முத்துக்கள் இராக்கினியின் (மரியாள்) புனிதத்தையும் தனிச்சிறப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (சென்மப் பாவமின்றி உற்பவித்த இராக்கினியே... திருச்செபமாலையின் இராக்கினியே...)

நன்றி : – **தாயே எங்கள் தஞ்சமே.**

## தெரியுமா உங்களுக்கு!

- பல்லி நீர் அருந்துவதே இல்லை.
- கரப்பான் பூச்சி 45 நாள்கூட உணவின்றி இருக்கும்.
- முதலை மட்டுமே மேல்தாடையை உயர்த்தக்கூடியது.
- யானை நின்று கொண்டே தான் தூங்கும்.
- ஒட்டகச் சிவிங்கியால்  எந்த ஒலியும் எழுப்ப முடியாது.
- ஆயிரம் சிறு கண்களின் கூட்டமைப்புதான் ஈயின் கண்.
- முழு இருட்டில் பூனையால் பார்க்கமுடியாது.

– **ஸ்வீட்டன்,** திசையன்விளை




## “திருக்கல்யாணத்தாய்” சந்தாதாரர்களுக்குஓர் அன்பான நினைவூட்டல்

“**திருக்கல்யாணத்தாய்**” மாத இதழின் சந்தாதாரர்களில் பெரும்பாலான சந்தாதாரர்கள் வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் தாங்கள் தங்கள் சந்தாக்களை ஜனவரி முதல் புதுப்பிக்கும்படி  அன்புடன் வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தங்களின் சந்தாவினை புதுப்பிக்க வரும்போது தங்களுடைய முகவரியோடு இணைக்கப்பட்டுள்ள பதிவு எண்ணையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம். சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும்.

தொடர்புக்கு : **பங்குத் தந்தை**

**திருக்கல்யாண மாதா ஆலயம்**

**பொத்தக்காலன்விளை 628 702 தூத்துக்குடி மாவட்டம்,**

**தமிழ்நாடுதொலைபேசி : 04639 ! 261230**

– **பங்குத்தந்தை**

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு
# நினைவு நாள்









## திருமதி. எலிசபெத் அம்மாள்

(இறப்பு 15.11.2011)

பிரிவால் வருந்தும்

**மகன்கள், மருமகள்கள்,**
**மகள், மருமகன்,**
**பேரன்கள், பேத்திகள்,**
**கொள்ளுபேரன்கள்**
**மற்றும் குடும்பத்தார்கள்...**

# கிறிஸ்து அரசர்



பிலாத்து யேசுவிடம் அப்படியானால் நீ அரசன் தானோ என்று கேட்டான். அதற்கு இயேசு அரசன் என்று நீர் சொல்லுகிறீர் (யோவா.18:37) என்று தான் அரசர் என்பதை பிலாத்துவின் வாயாலே சொல்ல வைக்கிறார். அவர் தாவீதின் அரியணை மீது வீற்றிருந்து என்றென்றும் அரசாள்வார், ஆண்டவரே உமது அரசு எக்காலமும் உள்ளது உமது ஆட்சி தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருக்கும் என்று சங்கீத ஆசிரியர் இறை அரசை உணர்த்துகிறார். படைப்புலகம் அனைத்தின் மீதும் நகரங்கள் குடும்பங்கள் என்றும் சமூகங்களின் மீதும் தனிமனிதர் மேலும் கிறிஸ்து கொண்டிருக்கும் மேலான அரசுரிமையை தெளிவுபடுத்தி உலக முழுமையும் கிறிஸ்து அரசரின் இனிய ஆளுமையை முழு விருப்பத்தோடும் பணிவோடும் ஏற்றுக் கொள்ளும்படியாக கிறிஸ்து அரசர் திருநாளை திருத்தந்தை பதினொன்றாம் பத்திநாதர் ஏற்படுத்தினார். கிறிஸ்து அரசர் பெருவிழா நவம்பர் மாதம் கொண்டாடப்படுகிறது.

கிறிஸ்து அரசர் ஏற்படுத்திய இறை அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல. அதாவது கிறிஸ்துவின் அரசு, அவரது ஆட்சி, இடத்தைச் சார்ந்தது பதவிக்கு முக்கியத்துவம் தருவதல்ல பரிவுக்கு, இரக்கத்திற்கு முக்கியத்துவம் தருவது. ஏழைகள் மீது, நசுக்கப்பட்டவர்கள் மீது, கைவிடப்பட்டோர் மீது, ஆதரவற்றோர் மீது பரிவு காட்டுவது அவர்களிடம் நம் அரசர் கூறுகிறார். என் மகனே, மகளே உங்கள் அகந்தை, கோபம், பகைமை எல்லாம் அகற்றிவிட்டு என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன் உங்கள் குறைகளை தீர்ப்பேன் என்று.


கிறிஸ்து அரசரின் இன்னொரு பரிமாணம் அன்பு. இயேசு மனுக்குலம் அனைவர் மீதும் தன் அன்பைக் காட்டினார். அவர் மனுக்குலம் மீது கொண்டிருந்த அன்பின் உச்சக்கட்டம் மனுக்குல மீட்புக்காக இரத்தம் சிந்தி தன் உயிரையே கொடுத்தது. அவர் தம் சீடர்களுக்கு கூறியது போல் நமக்கும் கூறுகிறார், என் மக்களே நீங்கள் பகைமையை விட்டொழித்து ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள் என்று கூறுகிறார். நம் அன்பு எவ்வாறு இருக்கவேண்டும்? நீ உன்னை நேசிப்பது போல் உன் அயலானையும் நேசி என்கிறார் இயேசு. மேலும் நம் கிறிஸ்து அரசர் நமக்கு அறிவுறுத்துகிறார். உன் அன்பில் சிறந்த அன்பு நீ உன் பகைவனையும் அன்பு செய்யவேண்டும் என்பது தான்.

கைமாறு கருதி அன்பு செய்வது கிறிஸ்து அரசர் கற்பித்த அன்பு ஆகாது. அது மாய அன்பு. நான் காட்டிய அன்புக்கு கைமாறாக என் மேல் குற்றம் சாட்டினர் நானோ அவர்களுக்காக மன்றாடினேன் என்று தாவீது அரசர் பாடுகின்றார். நம் கிறிஸ்து அரசர் தன்னை கசையால் அடித்து கழுமரமேற்றிய போதும் அவர் அம் மக்களை அன்பு செய்கிறார். பிதாவே இவர்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள் அவர்களை மன்னியும் என்று அவர்களை மன்னிக்கிறார். பிதாவிடம் பரிந்துரைக்கிறார். நாமும் நம் கிறிஸ்து அரசரை பின்பற்றி நம் பகைவரையும் அன்பு செய்வோம், அவர்களுக்காக ஜெபிப்போம்.

– **மல்லிகா எம்பரர்,** அழகை.

# வாழ்வு தரும் வார்த்தைகள் – நவம்பர் – 2012

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | சகல புனிதர் | தி.வெ.7:2-4,9-14<br>1யோவா 3:1-3 | மத். 5:1-12 |
| 2. | அனைத்து ஆன்மாக்கள் | 1தெச. 4:13-18 | யோவா. 6:51-59 |
| 3. | புனித மார்டின் தெ போரஸ் | பிலி. 4:4-9 | யோவா. 13:34 |
| 4. | பொதுக்காலம் ஞாயிறு - 31 | இச.6:2-6 எபி. 7:23-28 | மாற். 12:28-34 |
| 5. | | பிலி.2:1-4 | லூக்.14:12-14 |
| 6. | | பிலி. 2:5-11 | லூக். 14:15-24 |
| 7. | | பிலி. 2:12-18 | லூக். 14:25-33 |
| 8. | | பிலி. 3:3-8 | லூக். 15:1-10 |
| 9. | லாத்தரன் பேராலய அபிகேம் | எசே.47:1-2,8-9,12<br>1கொரி. 3:9-11,16-17 | யோவா. 2:13-22 |
| 10. | புனித பெரிய லியோ | சீ.ஞா. 39:6-10 | மத். 16:13-19 |
| 11. | பொதுக்காலம் ஞாயிறு - 32 | 1அர.17:10-16<br>எபி.9:24-28 | மாற்.12:38-44 |
| 12. | புனித ஜோசப்பாத் | எபே. 4:1-7,11-13 | யோவா. 17:20-26 |
| 13. | | தீத். 2:1-8,11-14 | லூக். 17:7-10 |
| 14. | | தீத். 3:1-7 | லூக். 17:11-19 |
| 15. | புனித பெரிய ஆல்பர்ட் | பிலோ. 1:7-20 | லூக். 14:20-25 |
| 16. | | 2யோவா. 4-9 | லூக். 17:26-37 |
| 17. | | 3யோவா 5-8 | லூக். 18:1-8 |
| 18. | பொதுக்காலம் ஞாயிறு -33 | தானி.12:1-3<br>எபி.10:11-14,18 | மாற். 13:24-32 |
| 19. | | தி.வெ. 1:1-4, 2:1-5 | லூக்.18:35-43 |
| 20. | | தி.வெ.3:1-6,14-22 | லூக். 19:1-10 |
| 21. | மரியாள் காணிக்கையாக்கப்பட்டது | செக். 2:10-13 | மத். 12:46-50 |
| 22 | புனித செசிலியா | ஒசே.2:14-15,19-20 | மத். 25:1-13 |
| 23 | புனித கிளமெண்ட் | தி.வெ. 10:8-11 | லூக். 19:45-48 |
| 24 | | தி.வெ. 11:4-12 | லூக். 20:27-40 |
| 25 | கிறிஸ்து அரசர் பெருவிழா | தானி.7:13-14 தி.வெ.1:5-8 | யோவா. 18:33-37 |
| 26 | | தி.வெ. 14:1-5 | லூக். 2:1-4 |
| 27 | | தி.வெ.14:14-20 | லூக். 21:5-11 |
| 28 | | தி.வெ. 15:1-4 | லூக்.21:12-19 |
| 29 | | தி.வெ.18:1-2,21-23,19:1-3,9 | லூக். 21:20-28 |
| 30 | புனித அந்திரேயா | உரோ.10:9-18 | மத். 4:18-22 |



# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி
இறைவாக்கினர் புத்தகங்கள்
**யோவேல்** அதிகாரம் 1 – 3,
**ஆமோஸ்** அதிகாரம் 1 – 9,
**யோனா** அதிகாரம் 1 – 4,
**மீக்கா** அதிகாரம் 1 – 4,

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.11.2012

**இடமிருந்து வலம்**

1. யோவேலின் தந்தை யார்?
5. போரடிக்கும் களங்களில் நிறைந்திருப்பது எது?
9. சீயோனிலிருந்து ஆண்டவர் ..................... செய்கின்றார்.
13. பாசான் பசுக்கள் எந்த மலையின் மேல் வாழுகின்றன?
17. நினிவே அரசன் எதன் மீது உட்கார்ந்தான்.
21. குதிரைகளைத் ....................... பூட்டுங்கள்.

**வலமிருந்து இடம்**

2. ஒலிவ மரங்கள் என்ன தரும்?
6. புதல்வரும் புதல்வியரும் என்ன உரைப்பர்?
10. எந்த மலையின் உச்சி காய்ந்து போனது?
14. பெத்தேலின் குரு யார்?
18. அவர் காலடியில் ................... உருகிப்போகும்.
22. நீங்கள்..................................யை அருவெறுக்கிறீர்கள்.

**மேலிருந்து கீழ்**

3. மனிதர்களை விட்டு மறைந்து போனது எது?
7. இருண்டு போவது எது?
11. யாருடைய வீட்டின் மேல் தீ மூளும்?
15. பாகாய் உருகுவது எது?
19. யூதாவின் தொழுகை மேடுகளுக்குக் காரணம் யாது?
23. திருச்சட்டம் வெளிப்படும் இடம் எது?

**கீழிருந்து மேல்**

4. மண் கட்டிகளின் கீழ் மக்கிப் போனது எது?
8. யூதாவின் மக்களை எதற்கு உள்ளாக்கினார்கள்?
12. கருவாலி மரத்தின் வலிமை கொண்டவர் யார்?
16. யோனாவின் தலையை எது சுற்றியது?
20. சிலைகளை உடைத்து.........................ஆக்குவேன்.
24. இரும்பாக மாற்றப்படுவது எது?

## திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடுஅதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6!00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.
- மற்ற நாட்களில் காலை 6!00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

### இணையூர் வழிபாடுகள்

**கொழுந்தட்டு**

- வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

**நவமுதலூர்**

- வாரத்திற்கு ஒருமுறை திருப்பலி நடைபெறுகிறது.

**வாலத்தூர்**

- மாதத்திற்கு ஒருமுறை திருப்பலியும் தேவைக்கேற்ப மற்ற நாட்களில் திருப்பலியும் நடைபெறுகிறது.


**அடுத்த இதழ்**

கிறிஸ்து பிறப்பு, திருவருகைக் காலம், அமல அன்னை, திருக்குடும்பம் ஆகிய கருத்துக்களைத் தாங்கி வரவிருக்கிறது. இவைகளைப் பற்றிய கருத்துக்கள் கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-11-2012**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !


என் இயேசு இராஜாவுக்கே!
எந்நாளும் ஸ்தோத்திரம்!!
solomon Graphics, Tsy. 9788675143